# ‘பல்டி’ அடிக்கும் விஜய் - ‘பல்பு’ வாங்கும் த.வெ.க.!

**பல்டி –** தமிழ்நாடு சட்டமன்றத்தில் 12.8.2026 அன்று தொகுதி மறுவரையறை தொடர்பான தீர்மானத்தில் மறுவரையறயே கூடாது (No delimitation) என்று அறிவித்தது விஜய் அரசு. ஒன்றிய பா.ஜ.க அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் 20.8.2026 அன்று நடந்த தென்மாநில முதல்வர்கள் கூட்டத்தில் மாநிலங்களின் விகித்தாச்சாரம் மாறாமல் மறுவரையறை (Fair delimitation)என பல்டி அடித்தார் முதல்வர் விஜய்.

**பல்பு –** சட்டப்பேரவைக்கு முதலமைச்சர் வந்து வணக்கம் வைக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நிற்பதில்லை என்றும், அவருக்கு கண்ணியத்தைக் கற்றுத்தர வேண்டும் என்றும் அதிகப்பிரசங்கியான அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அவையில் பேசினார். அதற்கு பதிலளித்த தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், “சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் வரும்போதுதான் எழுந்து நிற்க வேண்டும். முதலமைச்சருக்கு எழுந்து நிற்க வேண்டும் என்றால் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அதே மரியாதையைத் தர வேண்டும்“ என்றார். பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகரன் அவர்கள், அவையில் பேரவைத் தலைவர்தான் முதன்மையானவர் என்பதையும், முதலமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் எழுந்து நிற்பது அவரவர் விருப்பம் என்றும் தெரிவிக்க, அமைச்சர் ரமேஷ் பல்பு வாங்கினார்.

**பல்டி –** ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை ஆகஸ்ட் மாதக் கடைசி வாரத்திலும் திறக்கப்படாத நிலையில், நடுவர் மன்றம் காவிரி மேலாண்மை ஆணையம் உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்துள்ள தமிழ்நாட்டின் உரிமைகளை அடமானம் வைக்கும் வகையில், கர்நாடகாவுக்கு நேரில் சென்று அம்மாநிலத்தின் காங்கிரஸ் முதலமைச்சரை தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் சந்திக்கப் போவதாக த.வெ.க. அமைச்சர்கள் மாற்றி மாற்றித் தெரிவித்தனர். தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட, கர்நாடக முதல்வரும் தமிழ்நாடு முதலமைச்சர் இப்போது வரவேண்டாம் என்று வழியை அடைத்துவிட்டதால், “கர்நாடகப் பயணத்தைக் கைவிடுவதாக” விஜய் அரசு பல்டி அடித்தது.

**பல்பு –** எல்லாத் துறைக்கும் தான்தான் அமைச்சர் என்பது போல செயல்படும், முதல் போட்ட அமைச்சரான ஆதவ் அர்ஜுனா அவையில் பேசும்போது, “ஒன்றிய அரசுக்கு 1 ரூபாய் வரியாகச் செலுத்தினால் அவர்கள் நமக்கு 40 ரூபாய் தருவதாக” உளறினார். எதிர்க்கட்சி வரிசையிலிருந்து 29 பைசாதான் ஒன்றிய அரசு தருகிறது என்று குரல் வந்ததும், பல்பு வாங்கியதை உணர்ந்து, அதையே திருப்பிச் சொன்னார் ஆதவ் அர்ஜுனா

**பல்டி –** த.வெ.க. ஆட்சியை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளில் உள்ளவர்கள் பற்றி விவரங்களைச் சேகரிக்குமாறு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குஜிலியம்பாறை வட்டாட்சியர் சுற்றறிக்கை அனுப்பினார். அதுபோலவே, கல்லூரிகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாணவர் அமைப்புகளின் செயல்பாடுகளில் பங்கேற்கக்கூடாது என்று மாணவர்களுக்குத் தடை விதித்தார் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் ஆணையர். த.வெ.க ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கே இந்த நிலைமையா என்று தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்ததும் இரண்டு சுற்றறிக்கைகளையும் வாபஸ் வாங்குவதாகக் கூறி அந்தர் பல்டி அடித்தது விஜய் அரசு.

**பல்பு –** கர்நாடக மாநில வனத்துறையால் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாகப் பேரவையில் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்த அமைச்சர் ஆல் இன் ஆல் அழகு ராஜாவான நிர்மல்குமார் தேவையே இல்லாமல் முத்தமிழறிஞர் கலைஞரைப் பற்றி



**கோவி.லெனின்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

அவதூறாகப் பேசினார். பேரவைத் தலைவர் குறுக்கிட்டு, “அமைச்சர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பொருள் மீது மட்டும்தான் பேச வேண்டும். தேவையில்லாதவற்றைப் பேசினால் அவை குறிப்பி லிருந்து நீக்கப்படும்” என்று சொல்லி, கலைஞர் பற்றிய அமைச்சரின் அவதூறுப் பேச்சை அவைக் குறிப்பிலி ருந்து நீக்க உத்தரவிட்டதால் நிர்மல்குமார் பல்பு வாங்கினார்.

**பல்டி –** 2026 மே 10ஆம் நாள் முதமைச்சராகப் பொறுப்பேற்ற விஜய், தனது தனிப்பட்ட ஜோதிடர் மற்றும் ஆலோசகராக உள்ள ரிக்கி ரத்தன் பண்டிட் வெற்றிவேல் என்பவரை சிறப்புப் பணி அதிகாரியாக நியமனம் செய்தார். இதற்கான அரசாணை வெளியே தெரியாதபடி மறைக்கப்பட்டது. மே 12 அன்று அது தெரியவந்தது. ஆஸ்தான ஜோதிடருக்கு அரசுப் பணி வழங்கப்பட்டிருப்பதை கூட்டணிக் கட்சிகளே கண்டித்த நிலையில், ஜோதிடருக்கு வழங்கப்பட்ட அரசுப் பதவியை ரத்து செய்து உத்தரவிட்டு, தனது முதல் பல்டியை அடித்தார் விஜய்.

**பல்பு –** கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கடந்த ஆட்சியில் கட்டப்பட்ட வீடுகள் சேதமடைந்து ஒழுகுவதாக ஆதாரமின்றி குற்றம்சாட்டினார் அமைச்சர் வினோத். அதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு, “இந்தத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட அரசு பணம்தான் தருகிறது. வீடுகளைக் கட்டிக்கொள்வது பயனாளிகள்தான்” என்று தெரிவித்ததும் அமைச்சர் பல்பு வாங்கினார்.

**பல்டி –** காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுப்படி தமிழ்நாட்டிற்கு உரிய தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என தி.மு.க சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடகாவில் அணைகள் நிரம்பி தண்ணீரைத் திறந்து விட்டுவிட்டதாகவும், மேட்டூர் அணையில் தண்ணீர் நிரம்பிவிட்ட தாகவும், இந்த நிலையில் தி.மு.க. மனு தாக்கல் செய்திருப்பதாகவும் விஜய்யின் விர்ச்சுவல் வாரியர்ஸ் சமூக வலைத்தளங்களில் தி.மு.க. மீது பாய்ந்தார்கள். அடுத்த இரண்டு நாட்களில், முதல்வர் விஜய் உத்தரவுப்படி தமிழ்நாடு அரசின் சார்பில் கர்நாடகாவிடம் தண்ணீர் கேட்டு தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. விஜய் அரசின் ஆகாச பல்டி இது.

**பல்பு –** நிதி அமைச்சர் மரியவில்சன் தமிழ்நாடு அரசின் கஜானாவிற்கு கடந்த சில மாதங்களில் மட்டும் 15ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார். இது குறித்து கேள்வி எழுப்பிய முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, “இந்த வருவாய் ஒன்றிய அரசின் பங்காக வந்த வரி வருவாயா? மாநில அரசின் சொந்த வருவாயா? என்ன கணக்கு?” என்று கேட்டதும், உரிய பதில் இல்லாமல் மரிய வில்சன் பல்பு வாங்கினார். 15ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கதையளந்தார்.

**பல்டி –** மகளிர் விடியல் பயணம் போன்ற மகத்தானத் திட்டங்களுக்கு எதிராக தன் கட்சிப் பெண்களைப் பேச வைத்தவர் விஜய். மக்களுக்கு நன்மை தரும் இலவசத் திட்டங்களை நிறுத்த வலியுறுத்திய விஜய், எம்.எல்.ஏக்களுக்கு இலவச கார் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார். 12 கார் வைத்திருக்கும் த.வெ.க எம்.எல்.ஏ.வுக்கும் மக்களின் வரிப்பணத்தில் ஓசி கார் வழங்கி ஆகாயத்துக்கும் பூமிக்குமாக பல்டி அடித்திருக்கிறார் விஜய்.

**பல்பு –** ரேஷன் கடையில் தற்போது வழங்கப்படும் அரிசிக்குப் பதில், சன்னரக அரிசி வழங்குவதற்காகத்தான் சன்னரக நெல்லுக்கு அரசின் ஆதார விலை உயர்த்தப்பட்டுள்ளதாகவும், டெல்டா விவசாயிகள் இனி சன்னரக நெல்லைப் பயிரிடுவார்கள் என்றும் பேரவையில் ஆதவ் அர்ஜுனா ஏக்கர் கணக்கில் அளந்து விட்டார். அதற்குப் பதிலடி தந்த முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, “டெல்டா மாவட்டங்களில் குறுவை, தாளடிப் பருவங்களில் சன்னரக நெல் விளைவிப்பது சாத்தியமில்லை” என்பதை ஆதாரத்துடன் எடுத்துக்கூறி, தற்போது விளையும் அரிசிதான் ரேஷனில் வழங்கப்படுவதையும், அது சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தக்கூடியது என்கிற மருத்துவக் காரணத்தையும் விளக்கியதால் ஆதவ் அர்ஜுனா ஹைவோல்ட்ஸ் பல்பு வாங்கினார்.

### தென்மாநில முதல்வர்கள் மாநாடு – புதுவை முதல்வர் ரங்கசாமி புறக்கணிப்பு!

## ஒன்றிய அரசிடம் நேரடியாக விவாதிக்கத் தைரியமில்லாமல் ஓடி ஒளிவது ஏன்?

### புதுவை மாநிலக் கழக அமைப்பாளர் இரா.சிவா கேள்வி!

புதுவை, ஆக. 22 -

புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், மேனாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -



மாநிலங்களின் வளர்ச்சியை முன்னெடுக்க அரசியல் சாசனப்படி உருவாக்கப்பட்டது தான் முதல்வர்கள் அடங்கிய மண்டல குழுக்கல் ஆகும். இந்திய நாடு ஐந்து மண்டங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்தின் கூட்டாட்சி - உள்கட்டமைப்பு - மாநிலங்களின் ஒருங்கிணைப்பு போன்றவைப்பற்றி ஆண்டுதோறும் ஒன்றாக விவாதித்து முடிவு எடுக்கும் கூட்டமாக இந்த மண்டல கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

அதன் தென் மாநில குழுவின் 31-வது மாநாடு நேற்றைய தினம் சென்னை கோவளத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்றது. அதில் தென் மாநிலங்களின் அனைத்து முதல்வர்களும் பங்கேற்று தங்கள் மாநிலத்தின் தேவைகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆழமாக விவாதித்த நிலையில், நமது புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வழக்கம் போல் இந்த மாநாட்டையும் புறக்கணித்திருப்பது மாநிலத்திற்கு அவர் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும்.

கடந்த காலங்களில் பிரதமர் தலைமையில் நடந்த நிதிஅயோக் போன்ற மிக முக்கிய மாநாடுகளை புறக்கணித்து வந்தது போலவே இந்த மாநாட்டையும் புறக்கணித்து இருப்பது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும். இது மாநிலத்திற்கு மிகப் பெரிய பின்னடைவை உருவாக்கும் செயலாகும். அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு செயல்படுவேன் என்று அவர் பதவிப் பிரமாணம் எடுத்ததற்கு விரோதமான செயலாகும்.

கடந்த ஐந்தாண்டு காலமாக பாஜக-என்.ஆர்.காங்கிரஸ் இரட்டை என்ஜின் ஆட்சியில் புதுச்சேரி பல்வேறு பின்னடைவுகளை சந்தித்து வந்தது. மாநில அந்தஸ்து, விமான நிலைய விரிவாக்கம், கூடுதல் நிதி ஒதுக்கீடு, நீர்வளத் தேவைகள், தொழில் வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு என பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சனைகளை இம்மாநாட்டில் முன் வைத்து தீர்வுகாணும் நல்ல சந்தர்ப்பத்தை முதல்வரின் புறக்கணிப்பு நழுவவிட்டு உள்ளதை உணர முடிகிறது.

சமீபத்தில் புதுச்சேரி வந்த உள்துறை அமைச்சருடன் அரைமணி நேரத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தியும் இவர்களுக்குள்ளான அதிகாரப் பகிர்விற்கு தீர்வு காண முடியாத நிலையில் இன்னும் பேரவைத் தலைவர் தேர்வு இழுபறியில் உள்ள பொழுது எப்படி உள்துறை அமைச்சரை சந்திப்பது என்ற பயத்தில் மாநாட்டை புறக்கணித்தாரா?. அல்லது தனக்கு போட்டியாக மாநில துணைநிலை ஆளுநர் பங்கேற்பதை பொறுத்துக் கொள்ளாமல் புறக்கணித்தாரா?. என்பதை முதல்வர் மக்களுக்கு விளக்க வேண்டும். எது எப்படி இருந்தும் இவர்களின் போட்டி அரசியல் புதுச்சேரி மக்களின் வாழ்வையும், வளர்ச்சியையும் பாதிப்பதாக உள்ளதை எவரும் ஏற்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல்வர் மாநில பிரச்சினைகளை ஒன்றிய அரசிடம் நேரடியாக முன் வைத்து விவாதிக்க தைரியமில்லாமல் அஞ்சி ஓடி ஒளிவது ஏன்?. புதுச்சேரி மக்களின் உரிமைகளை பெற்றுத் தருவதில் முதல்வர் ரங்கசாமி தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருவதை அவரது புறக்கணிப்பு சுட்டிக்காட்டுகிறது.

ஆளுநரின் அதிகார ஆதிக்கத்திற்கு வழிவகுத்து விட்டு தனது பொறுப்பிலிருந்து தப்பி ஓடிய ரங்கசாமி அவர்கள், ஆளுநர் மாநாட்டில் முன்வைத்த மாநில பிரச்சினைகள் மீது இவரது கருத்து என்ன என்பதையும் வெளிப்படுத்த வேண்டும். அதில் இவருக்கு உடன்பாடு உண்டா?. இல்லை ஆளுநரின் கருத்துக்கள் இரட்டை ஆட்சியில் வேறு ஒரு நிலைபாடா என்பதை தெரிவிக்க வேண்டும். இந்த மாநாட்டில் பங்கேற்று இருந்தால் அதன் மூலம் தனக்கு நிகராக ஆளுநருக்கு மாநாட்டில் இடம் தந்ததை கேள்விக்கு உள்ளாக்கி இருக்க முடியும். சட்டமன்றம் இல்லாத யூனியன்பிரதேசங்கள் தங்கள் ஆளுநர் மூலம் பங்கேற்கலாமே தவிர சட்டமன்றமும், அமைச்சரவையும் உள்ள. யூனியன் பிரதேச ஆளுநர்கள் பங்கேற்பதை தடுத்திருக்க முடியும்.

மக்கள் பிரச்சனையும் பேசாமல், ஆளுநரின் அதிகாரத்தை கேள்விக்கு உள்ளாக்காமல் ஓடி ஒளிவதும், மவுனம் காப்பதும் ஒரு முதல்வருக்கு அழகல்ல. இது மிகப் பெரிய கோழைத்தனமும், புதுச்சேரி மக்களுக்கு இழைக்கும் மிகப் பெரிய துரோகமும் ஆகும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### கொசஸ்தலை ஆறு – எண்ணூர் கழிமுகத்தை

## சூழலியல் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து பாதுகாத்திடுவீர்!

### சட்டப் பேரவையில் –அரசுக்கு தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 22 -**

**“கொசஸ்தலை ஆறு மற்றும் எண்ணூர் கழிமுகத்தை சூழலியல் பாதுகாப்பு மண்டலமாக அறிவித்துப் பாதுகாத்திட வேண்டும்!” என்று, சட்டப் பேரவையில் அரசுக்கு கழக உறுப்பினர் தங்கம் தென்னரசு கோரிக்கை விடுத்தார்.**



சட்டப் பேரவையில் இது தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானம் மீதான விவாதத்தில் அவர் பேசியதாவது:

சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய பல பகுதிகள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக இன்றைக்கு இருக்கிறது. குறிப்பாக வடசென்னை பகுதியில் இருக்கக்கூடிய கொசஸ்தலை ஆறு, எண்ணூர் கழிமுகம் பகுதியில் என்பது இந்த சென்னை சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய நிலப்பரப்பினுடைய ஜீவாதாரமாக விளங்கக்கூடிய பகுதிகள். அது பொதுமக்களுக்காக மட்டுமல்ல பல்வேறு உயிரினங்கள் , பறவைகள், குடும்பங்கள் அதை நம்பி இருக்கக்கூடிய சூழல் உள்ளது.

குறிப்பாக மீனவர்கள் இந்தப் பகுதியிலே அந்த வளங்களை நம்பி இருக்கக்கூடிய நிலையில் தொடர்ந்து அங்கு இருக்கக்கூடிய இந்த ஆறு பல்வேறு காரணங்களாலே மாசுபடக்கூடிய நிலை வருகிறது. அதற்கு குறிப்பாக வடசென்னை பகுதியை தாண்டி இருக்கக்கூடிய எண்ணூர் பகுதிகளிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் மணலி போன்று இருக்கக்கூடிய பகுதியில் எண்ணூர் பகுதியில் வந்து இருக்கக் கூடிய தொழிற்சாலைகள் அந்த தொழிற்சாலைக் கழிவுகளில் வரக்கூடிய பிரச்சினைகள். ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதுபோல ஒரு எண்ணை கசிவு ஏற்பட்டு அங்கே பிரச்சினை வந்தபோது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு நம்முடைய அமைச்சராக இருந்த சகோதரர் மெய்யநாதனை உடன் அழைத்துக் கொண்டு அங்கு நேரடியாக சென்று அவற்றையெல்லாம் ஆய்வு செய்து அந்த நிவாரணங்களை வழங்கினார்கள். இப்படி ஒரு தொடர்கதை இந்தப் பகுதியிலே இருக்கிறது. அது பெருமளவிலே சூழலில் கேடுபாடுகளை உருவாக்குவதோடு அங்கே எப்போது மீன்கள் செத்து மிதக்கக் கூடிய அளவிற்கு அது அங்கே நம்பி இருக்கக் கூடிய மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்க கூடிய அளவில், சூழலியல் மொத்தமாக கொடுக்கக்கூடிய வகையில் அமைந்திருக்க கூடிய காரணத்தால் அரசு அதற்கான உடனடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு – தொடர்ந்து இந்தக் கேடுபாடுகளிலிருந்து அந்தப் பகுதியைக் காப்பாற்றக்கூடிய வகையில் ஒரு சூழலில் மண்டலமாக உருவாக்கக்கூடிய வகையிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

இவ்வாறு தங்கம் தென்னரசு பேசினார்.

### ‘மைனாரிட்டி’ த.வெ.க. ஆட்சியில் – விலையில்லா வேட்டி சேலை ஒதுக்கீடு நிறுத்தம்!

## வறுமையில் தவிக்கும் 400க்கும் மேற்பட்ட ஆண்டிப்பட்டி கூட்டுறவு சங்க நெசவுத் தொழிலாளிகள்!

## உரிய நிவாரணம் வழங்க – அரசுக்கு கோரிக்கை!

தேனி, ஆக. 22 -

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள சக்கம்பட்டி டி.சுப்புலாபுரம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நெசவு தொழில் புரியும் 400க்கு மேற்பட்ட நெசவாளர்கள் கடந்த 4 மாதங்களாக வேலையில்லாமல் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

சக்கம்பட்டி டி.சுப்புலாபுரம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை நம்பி 400க்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். கைத்தறி விசைத்தறி மற்றும் பெடல் தறி . மூலம் வேட்டி, சேலை நெய்து பிழைப்பு நடத்தி வந்தனர்.

ஆனால் கடந்த 4 மாதங்களாக மைனாரிட்டி தவெக ஆட்சியில் நெசவாளன் சங்கத்திற்கு தைப் பொங்கலுக்கு புதிய ஆர்டர்கள் எதுவும் வராததால் நெசவு பணிகள் முற்றிலும் முடங்கியுள்ளன. இதனால் நெசவாளர்கள் வேலையில்லாமல் வருமானம் இன்றி பரிதவித்து வருகின்றனர்.

விலையில்லா வேட்டி சேலை ஒதுக்கீடும் நிறுத்தம் இதற்கிடையில் தமிழக அரசின் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான ஒதுக்கீடும் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மூலம் கிடைக்கும் வேலை மற்றும் வருமானத்தை மட்டுமே நம்பியிருந்த பல நெசவாளர் குடும்பங்கள் தற்போது கடும் வறுமையில் சிக்கித் தவிக்கின்றனர். அன்றாட சாப்பிடுவதற்கும் மாணவர்களே படிப்பதற்கும் செலவுக்கு கூட வழியில்லாமல் கடன் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக நெசவாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். தமிழ்நாடு அரசு உடனடியாக தலையிட்டு சக்கம்பட்டி டி.சுப்புலாபுரம் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய உற்பத்தி செய்வதற்கு ஆர்டர்களை வழங்க வேண்டும். விலையில்லா வேட்டி சேலை திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, நெசவாளர்களுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என நெசவாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெசவு தொழிலை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் 400.க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படும் என அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.


### வாசுதேவநல்லூர் – தரணி சுகர்ஸ் கெமிக்கல் லிமிட்டெட்

## பணியாளர்களின் தொடர் போராட்டத்தில் அரசு உடனடியாக தலையிட்டுத் தீர்வு வழங்குக!

### சட்டப் பேரவையில் – கழக உறுப்பினர் ஈ.ராஜா கோரிக்கை மனு!

தென்காசி, ஆக. 22 -

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ. ராஜா பேரவை விதி என் 55 ன் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட பொருள் குறித்து அரசின் கவனத்திற்கு ஈர்க்கிறேன் என பேரவை தலைவருக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார்.



அதில் அவர் கூறியிருப்பதாவது.

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாசுதேவநல்லூர் தரணி சுகர்ஸ் கெமிக்கல் லிமிட்டெஸ் பணிபுரியும் சுமார் 50 பணியாளர்களுக்கு ஒரு வருட காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை. 42 மாதங்களாக PF,ESI வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் Lay off என்று இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது.

இதனால் மேற்படி பணியாளர்கள் நிறுவனத்தின் முன்பு தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அரசு உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுப்பது குறித்து அவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.